Mudhalpadi

Zoho Finance Private Limited

முதல்படி தனியுரிமைக் கொள்கை

கொள்கையின் பரப்பு

முதல்படி என்பது ஜோஹோ ஃபைனான்ஸ் பிரைவேட் லிமிடெட் (ZFPL) என்ற நிறுவன வணிக பெயர், இது பல்வேறு நிதி தயாரிப்புகள் மற்றும் சேவைகளை வழங்குகிறது. இந்த தனியுரிமைக் கொள்கையானது, முதல்படியுடன் (நிகழ்நிலை (ஆன்லைனிலும்) அகல்நிலை (ஆஃப்லைனிலும்)) தொடர்பு கொள்ளும் அதன்வருங்கால வாடிக்கையாளர்கள், இணையதள பார்வையாளர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் பிற தனிநபர்கள் தொடர்பான தனிப்பட்ட தகவல்களை ("நாங்கள்", "எங்கள்" அல்லது "எங்களுக்கு") எவ்வாறு சேகரிக்கிறது, பயன்படுத்துகிறது மற்றும் செயலாக்குகிறது என்பதை விளக்குகிறது ("நீங்கள்", "உங்கள்"). இந்த தனியுரிமைக் கொள்கை முதல்படியுடன் உங்கள் தொடர்புகளை நிறுவகிக்கிறது மற்றும் மற்ற வலைதளங்கள், தயாரிப்புகள் அல்லது சேவைகள் பயன்படுத்தும்போது பிரத்யேக தனியுரிமைக் கொள்கையைக் கொண்டிருந்தால் அது உங்களுக்கு பொருந்தாது.

நாங்கள் சேகரித்து, பயன்படுத்தும் தகவல்கள்

நாங்கள் உங்கள் தகவல்களை இந்தக் கொள்கையில் குறிப்பிட்ட நோக்கத்திற்காக மட்டுமே சேகரிக்கிறோம். உங்கள் தகவல்கள் எங்களிடம் இருந்தால் அது பின் வரும் வழிகளில் மட்டுமே சேகரிக்கப்பட்டு இருக்கும், (a) நீங்களே அந்த தகவல்களை வழங்கியிருந்தால் (b) நாங்கள் தானாகவே தகவல்களை சேகரித்திருந்தால் அல்லது (c) மூன்றாம் நபர் மூலம் அந்த தகவல்களைப் பெற்றிருந்தால் மேற்கூறப்பட்ட, அந்த மூன்று வகைகளில் ஒவ்வொன்றின் கீழும் வரும் பல்வேறு சூழ்நிலைகளையும், ஒவ்வொன்றிலும் சேகரிக்கப்பட்ட தகவல்களையும் பின்வருமாறு விவரிக்கிறோம்.

நீங்கள் **எங்களுக்கு** வழங்கும் தகவல்கள்

கணக்கு உருவாக்கல்:

நீங்கள் முதல்படியின் சேவைகளை பயன்படுத்த எங்கள் வலைதளத்தில் பதிவு செய்யும்போது அல்லது எங்கள் சேவைகளை ஆஃப்லைனில் பெறும்போது, உங்களுக்கு ஒரு வலைதள கணக்கு ஒன்றை முதல்படியில் அமைத்து தருகிறோம். எங்கள் தயாரிப்புகள் அல்லது சேவைகளை நீங்கள் பெறும்போது நாங்கள் உங்களுக்காக கடன் கணக்கையும் அமைக்கிறோம். வழங்கப்படும் தயாரிப்புகள் மற்றும் சேவைகளைப் பெறவும், எங்களுடன் உங்கள் கடன் கணக்கை நிர்வகிக்கவும் இணையதளக் கணக்கைப் பயன்படுத்தலாம். கணக்கு பதிவு செயல்முறையை முடிக்க உங்கள் பெயர், தொடர்பு எண் மற்றும் பிறந்த தேதி போன்ற தகவல்களை நாங்கள் கேட்கிறோம். அத்துடன், நீங்கள் தனித்துவமான பயனர்பெயர் மற்றும் கடவுச்சொல் ஒன்றைத் தேர்வு செய்ய வேண்டியிருக்கும். உங்கள் நேர மண்டலம் மற்றும் மொழிப் பற்றிய தகவல்களையும் வழங்கலாம், ஆனால் அவை கணக்கு பதிவுக்கு அவசியமானது அல்ல.

KYC சரிபார்ப்பு:

உங்களை முதல்படியின் வாடிக்கையாளராக இணைப்பதற்கு முன்னர் ஒரு முழுமையான KYC சரிபார்ப்பு செயல்முறையை நடத்த வேண்டும். இந்த KYC செயல்முறையின் ஒரு பகுதியாக, உங்கள் அல்லது உங்கள் வணிகத்தின் பிரதிநிதிகள் பற்றிய சில தனிப்பட்ட அடையாளம் கொண்ட தகவல்களை சேகரிக்கிறோம். நீங்கள் எங்களிடம் சமர்ப்பிக்கும் பிற ஆவணங்களைத் தவிர, திருமண நிலை, குடியுரிமை, வேலைவாய்ப்பு விவரங்கள், புகைப்படம், டிஜிட்டல் கையொப்பம் உள்ளிட்ட கையொப்பம், ஆதார் எண் மற்றும் பயோமெட்ரிக் தரவு ஆகியவற்றை KYC செயல்முறையின் ஒரு பகுதியாக நாங்கள் சேகரிக்கிறோம். கடந்தகால கடன் பதிவுகள், வங்கி அறிக்கைகள், வருமான

*ஆதாரம் மற்றும் சான்றுகள், மற்றும் பிணையம் தொடர்பான தகவல் மற்றும் ஆவணங்கள் (நீங்கள் பாதுகாப்பான கடனைப் பெற்றிருந்தால்) போன்ற உங்கள் நிதி தகவல்களையும் வழங்குமாறு கேட்டுக்கொள்வோம். கூடுதலாக, காணொளி KYC நடத்துவதற்காக நாங்கள்/ எங்கள் சேவை வழங்குநர்கள் உங்கள் சாதனத்தின் புகைப்படம், ஒலி கருவி மற்றும் இருப்பிடத்தை உங்கள் ஒப்புதலுடன் அணுகலாம். காணொளி KYC ஐ நடத்துவதற்குத் தேவையானதைத் தவிர வழங்கப்பட்ட அணுகல்கள் மூலம் நாங்கள் எந்த தகவலையும் சேகரிக்க மாட்டோம், சரிபார்ப்பு செயல்முறை முடிந்ததும் நீங்கள் அணுகலைத் திரும்பப் பெறலாம்.*

*நிகழ்வுகள் பதிவு மற்றும்* ***பிற*** *படிவ சமர்ப்பிப்புகள்:*

*நீங்கள் (i) எந்தவொரு நிகழ்வுக்கும், வலையரங்கம் அல்லது கருத்தரங்கங்களுக்கு பதிவு செய்யும்போது, (ii) எங்கள் செய்திமடல் அல்லது வேறு எந்தவொரு அஞ்சல் பட்டியலிலும் பதிவு செய்யும்போது, (iii) எந்தவொரு வெள்ளை அறிக்கை அல்லது பிற ஆவண நகல்களை பதிவிறக்கம் செய்ய/அடைய படிவம் சமர்ப்பிக்கும்போது, (iv) போட்டிகளில் பங்கேற்கும்போது அல்லது கணக்கெடுப்புகளுக்கு பதிலளிக்கும்போது, அல்லது (v) வாடிக்கையாளர் ஆதரவு கோரும்போது, மேற்கோள் பெறும்போது அல்லது முதல்படியுடன் எந்தவொரு நோக்கத்திற்காகவும் தொடர்பு கொள்ளும் படிவத்தை சமர்ப்பிக்கும்போது உங்களால் சமர்ப்பிக்கப்படும் தகவல்களை பதிவு செய்கிறோம்.*

*சான்றுகள்:*

*நீங்கள் எங்கள் தயாரிப்புகள் மற்றும் சேவைகள் பற்றி வலைதளங்களில் சான்றுகளை வெளியிடுவதற்கு அனுமதி அளித்திருந்தால், சான்றுகளில் உங்கள் பெயர் மற்றும் பிற தனிப்பட்ட தகவல்களை சேர்க்கக்கூடும். சான்றுகளை நாங்கள் வெளியிடும் முன் நீங்கள் அதை மதிப்பீடு செய்து ஒப்புதல் அளிக்க வாய்ப்பு அளிக்கப்படும். உங்கள் சான்றுகளை புதுப்பிக்க அல்லது அழிக்க விரும்பினால், எங்களை privacy@zfpl.com முகவரியில் அணுகலாம்.*

*எங்களுடனான உங்கள் தொடர்புகள்:*

*எங்கள் விற்பனை மற்றும் வாடிக்கையாளர் ஆதரவு பணியாளர்களுடனான உங்கள் மின்னஞ்சல், தொலைபேசி மற்றும் உரையாடல்களை உங்களுடனும் பிற வாடிக்கையாளர்களுடனுமான எங்கள் தொடர்புகளை மேம்படுத்த பயன்படுத்துகிறோம்.*

*தானாகவே சேகரிக்கப்படும் தகவல்கள்:*

*உலாவிகள் (ப்ரோவ்சர்) , சாதனங்கள், மற்றும் சேவையகங்களிடமிருந்து தகவல்கள்: நீங்கள் எங்கள் வலைதளங்களை பார்வையிடும்போது, இணைய உலாவிகள், கைபேசி சாதனங்கள் மற்றும் சேவையகங்கள் வழங்கும் தகவல்கள் போன்றவைகளைச் சேகரிக்கிறோம். இந்த தகவல்கள் இணைய முகவரி, உலாவி வகை, மொழி விருப்பம், நேர மண்டலம், குறிப்பிட்ட இணையதளம், அணுகும் தேதி மற்றும் நேரம், இயங்கு தளம், கைபேசி சாதன உற்பத்தியாளர் மற்றும் கைபேசி நெட்வொர்க் தகவல்கள் போன்றவை அடங்கும். எங்கள் வலைத்தளங்களுக்கு வருபவர்களைப் பற்றி மேலும் புரிந்து கொள்ள, எங்கள் பதிவுக் கோப்புகளில் இவற்றைச் சேர்த்துள்ளோம்.*

*குக்கீக்கள் மற்றும்* ***தடம் கணங்காணிதல்*** *தொழில்நுட்பங்களிலிருந்து தகவல்கள்: எங்கள் சேவைகளை பயன்படுத்தும் பயனர்களை அடையாளம் காணவும், பயனர் அனுபவத்தை மேம்படுத்தவும் தற்காலிக மற்றும் நிரந்தர குக்கீக்களைப் பயன்படுத்துகிறோம். எங்கள் பதிவிறக்கக்கூடிய தயாரிப்புகளில் தனித்துவமான அடையாளக்குறிகளை சேர்ப்பதன் மூலம் அவற்றின் பயன்பாட்டைப் பின்தொடருகிறோம். பார்வையாளர்களை அடையாளம் காணவும், வலைத்தள*

வழிசெலுத்தலைக் கண்காணிக்கவும், பார்வையாளர்கள் மற்றும் பயனர்களைப் பற்றிய மக்கள்தொகைத் தகவல்களைச் சேகரிக்கவும், மின்னஞ்சல் பிரச்சார செயல்திறனைப் புரிந்துகொள்ளவும், எங்கள் வலைத்தளங்களில் உங்கள் செயல்பாடுகளைக் கண்காணிப்பதன் மூலம் இலக்கு பார்வையாளர் மற்றும் பயனர் ஈடுபாட்டிற்காகவும் குக்கீகள், பீக்கான்கள், குறிச்சொற்கள், ஸ்கிரிப்ட்கள் மற்றும் பிற ஒத்த தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துகிறோம். சில சந்தர்ப்பங்களில், குக்கீகளை முடக்க உங்களுக்கு விருப்பம் உள்ளது. இருப்பினும், நீங்கள் அவ்வாறு செய்தால், எங்கள் வலைத்தளங்கள் அல்லது செயலிகள் சில அம்சங்கள் சரியாக வேலை செய்யாமல் போகலாம், சில அம்சங்களை வழங்க உள்ளடக்க தகவல்களையும் விருப்பங்களையும் சேமிக்க HTML5 போன்ற முதல் தரப்பு உள்ளூர் சேமிப்பு பொருள்களையும் (LSO கள்) பயன்படுத்துகிறோம்.

**செயலியின்** பயன்பாட்டு பதிவுகள் மற்றும் **கைபேசி பகுப்பாய்வுகளி**லிருந்து தகவல்கள்:

எங்கள் தயாரிப்புகள், சேவைகள் மற்றும் கைபேசி செயலிகளை நீங்கள் பயன்படுத்துவது பற்றிய தகவல்களை செயலிகலின் பயன்பாட்டு பதிவுகள் மற்றும் உள் பயன்பாட்டு பகுப்பாய்வு கருவிகளிலிருந்து சேகரிக்கிறோம், மேலும் உங்கள் பயன்பாடு மற்றும் தேவைகள் எங்கள் தயாரிப்புகளை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பதைப் புரிந்துகொள்ள அதைப் பயன்படுத்துகிறோம். இந்த தகவல்களில் கிளிக்குகள், ஸ்க்ரோல்கள், அணுகப்படும் அம்சங்கள், அணுகும் நேரம் மற்றும் எண்ணிக்கை, ஏற்பட்ட பிழைகள், செயல்திறன் தரவுகள், சேமிப்பு பயன்பாட்டு, பயனர் அமைப்புகள் மற்றும் கட்டமைப்புகள் மற்றும் அணுகும் சாதனங்கள் மற்றும் அவற்றின் இருபிடங்கள் அடங்கும்.

மூன்றாம் நபர்களிடமிருந்து சேகரிக்கப்படும் தகவல்கள்:

ஒன்றிணைந்த அங்கீகார சேவை **வழங்குநர்களைப் பயன்படுத்தி பதிவுபெறுதல்**: எங்கள் வலைதளம், லிங்க்டின், மைக்ரோசாப்ட் மற்றும் கூகிள் போன்ற ஒன்றிணைந்த அங்கீகார சேவை வழங்குநர்களைக் கொண்டிருக்கலாம் இது முதல்படியில் பதிவு பெற உங்களுக்கு உதவும். இந்த சேவைகள் உங்கள் அடையாளத்தை சரிபார்க்கும் மற்றும் உங்கள் பெயர் மற்றும் மின்னஞ்சல் முகவரி போன்ற சில தனிப்பட்ட தகவல்களை எங்களுடன் பகிர தேர்வு உரிமை தரும்.

அடையாள சரிபார்ப்பு வழங்குநர்களிடமிருந்து தகவல்கள்: எங்கள் சேவைகளை வழங்க உதவும் சில மூன்றாம் நபர் சேவை வழங்குநர்களை அடையாள சரிபார்ப்பு, மோசடி கண்டறிதல் மற்றும் மோசடி தடுப்பு போன்றவற்றிற்காக ஈடுபடுத்துகிறோம். பெயர், பிறந்த தேதி, நேரடி அல்லது மறைமுக அரசியல் வெளிப்பாடு, தற்போதைய மற்றும் முந்தைய முகவரிகள், உங்கள் நிறுவனத்தின் பெயர் மற்றும் நிரந்தர கணக்கு எண், முதன்மை மற்றும் பிற தொலைபேசி எண் (கள்) அவற்றின் நிலை மற்றும் பிணைய சேவையாளர் தகவல் போன்ற தொடர்பு விவரங்கள், உங்கள் கணக்கை எங்களுடன் அமைக்கும்போது அல்லது உங்கள் கடன் விண்ணப்பத்தை செயலாக்கும்போது அத்தகைய சேவை வழங்குநர்களிடமிருந்து உங்கள் கடன் தகவல் போன்ற சில தனிப்பட்ட தகவல்களை நாங்கள் பெறுகிறோம்.

பரிந்துரைகள்:

எங்கள் தயாரிப்புகள் அல்லது சேவைகள் பற்றி யாராவது உங்களுக்கு பரிந்துரை செய்திருந்தால், அந்த நபர் உங்கள் பெயர், மின்னஞ்சல் முகவரி மற்றும் மற்ற தனிப்பட்ட தகவல்களை எங்களுக்கு வழங்கியிருக்கலாம். உங்கள் தகவல்களை எங்கள் தரவுத்தளத்திலிருந்து நீக்கக்கோரி நீங்கள் எங்களை privacy@zfpl.com முகவரிக்கு அணுகலாம். மற்றொரு நபரைப் பற்றிய தகவல்களை நீங்கள் எங்களுக்கு வழங்கினால், அல்லது மற்றொரு நபர் உங்கள் தகவலை

எங்களுக்கு வழங்கினால், அந்தத் தகவலை எங்களுக்கு வழங்கிய குறிப்பிட்ட காரணத்திற்காக மட்டுமே பயன்படுத்துவோம்.

மூன்றாம் நபர் சேவை வழங்குநர்களிடமிருந்து தகவல்கள்:

நீங்கள் எங்கள் கூட்டாளிகள், வங்கி தொடர்பாளர் மற்றும் நேரடி விற்பனை முகவர்களைத் தொடர்பு கொள்ளும்போது அல்லது எங்கள் தயாரிப்புகள் அல்லது சேவைகள் பற்றி ஆர்வம் வெளிப்படுத்தும்போது, அந்த மூன்றாம் நபர் சேவை வழங்குநர்கள் உங்கள் பெயர், மின்னஞ்சல் முகவரி, நிறுவனப் பெயர் மற்றும் மற்ற தகவல்களை முதல்படிக்கு வழங்கலாம். முதல்பாடியால் நிதியுதவி செய்யப்படும் ஒரு நிகழ்வுக்கு நீங்கள் பதிவுசெய்தால் அல்லது கலந்து கொண்டால், நிகழ்வு அமைப்பாளர் உங்கள் தகவல்களை எங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம். எங்கள் தயாரிப்புகள் மற்றும் சேவைகள் பற்றிய ஏதேனும் மதிப்பாய்வு குறித்து நீங்கள் கருத்து தெரிவித்தால், விமர்சன தளங்களிலிருந்தும், எங்கள் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை சந்தைப்படுத்துவதில் நாங்கள் ஈடுபடுத்தும் பிற மூன்றாம் தரப்பு சேவை வழங்குநர்களிடமிருந்தும் முதால்படி உங்களைப் பற்றிய தகவல்களைப் பெறலாம்.

சமூக ஊடக தளங்கள் மற்றும் பிற பொது **தளங்களிலிருந்து கிடைக்கக்கூடிய** தகவல்கள்:

நீங்கள் எங்கள் தயாரிப்புகள் பற்றி கருத்துக்கள் அல்லது விமர்சனங்களை வழங்கும் போது, சந்தைப்படுத்தும் தளங்கள், விமர்சன தளங்கள் அல்லது சமூக ஊடக தளங்களில் பதிவுகள், கருத்துக்கள், கேள்விகள் மற்றும் பிற உரையாடல்கள் மூலம் நீங்கள் ஈடுபடும்போது, அவைகளில் கிடைக்கக்கூடிய பொது தகவல்களை எங்களுடைய தயாரிப்புகள் மற்றும் சேவைகளை மேம்படுத்த, பயனர் எதிர்வினைகளை மற்றும் பிரச்சினைகளை நன்கு புரிந்துகொள்ள மற்றும் உங்கள் கருத்துக்களை எங்கள் வலைதளங்களில் பதிவிட சேகரிக்கிறோம். ஒருமுறை சேகரிக்கப்பட்ட பின்னர், இந்த தகவல்கள் நீங்கள் அந்த தளங்களில் நீக்கிவிட்டாலும் எங்களிடம் தொடர்ந்து இருக்கும். பொதுவில் கிடைக்கும் பிற மூலங்களிலிருந்தும் முதால்படி உங்களைப் பற்றிய தகவல்களைச் சேர்த்து புதுப்பிக்கலாம்.

பிற **மூலங்கள்**:

கடன் மீட்பு முகவர்களை நாங்கள் ஈடுபடுத்தும் போது, உங்கள் வங்கி கணக்கு தகவல்கள் மற்றும் பிற கட்டண விவரங்களையும் சேகரிக்கிறோம். மேலும், நாங்கள் கடன் தகவல் பணியகம், மத்திய KYC பதிவேடுகள் பதிவகம் (CKYCR), டிஜிலாக்கர் மற்றும் பிற சரிபார்ப்பு அதிகாரங்களிடமிருந்தும் தகவல்களை சேகரிக்கிறோம்.

தகவல்களைச் சேகரிப்பதற்கும் பயன்படுத்துவதற்குமான நோக்கங்கள்:

மேலே குறிப்பிட்ட நோக்கங்களுக்கு மேலதிகமாக, நாங்கள் உங்கள் தகவல்களை பின்வரும் நோக்கங்களுக்காகவும் பயன்படுத்தலாம்:

- முதல்படியின் சேவைகளை (உங்கள் கணக்கை அமைத்தல் மற்றும் பராமரிப்பு, கடன் விண்ணப்பங்களை செயலாக்கல் மற்றும் கடன்களை நீட்டித்தல் உட்பட) வழங்குவதற்கு.
- உங்கள் அடையாளத்தைச் சரிபார்க்கவும், கடன் தகுதியை மதிப்பீடு செய்யவும், மோசடி பரிமாற்றம் அல்லது செயல்பாடுகளைக் கண்டறியவும் மற்றும் தடுப்பதற்கும்.

• முதல்படிக்கு பொருந்தும் எந்தவொரு சட்டத் தேவைகளுக்கும் இணங்க ("உங்கள் வாடிக்கையாளரை அறிந்து கொள்ளுங்கள்", பணமோசடி தடுப்புச் சட்டங்கள் அல்லது பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்களின் கீழ் உள்ள தேவைகளுக்கு இணங்குவது உட்பட)

• முதல்படியின் சேவைகளை நீங்கள் எவ்வாறு பயன்படுத்துகிறீர்கள் என்பதைப் புரிந்துகொள்வதற்கும், சிக்கல்களைக் கண்காணிக்கவும் தடுப்பதற்கும், எங்கள் சேவையை மேம்படுத்தவும்;

• வலைத்தளப்போக்குகளை பகுப்பாய்வு செய்வதற்கும், எங்கள் வலைத்தளங்களை நிர்வகிப்பதற்கும், பார்வையாளர்கள் எதைத் தேடுகிறார்கள் என்பதைப் புரிந்துகொள்வதற்கும் அவர்களுக்கு சிறப்பாக உதவுவதற்கும் எங்கள் வலைத்தளங்களில் பார்வையாளர் வழிசெலுத்தல்களைக் கண்காணிக்கவும்;

• கருத்துக்கணிப்புகளில் பங்கேற்கும்படி உங்களைக் கேட்பதற்கு அல்லது எங்கள் சேவைகளைப் பற்றிய கருத்தைப் பெறுவதற்கு;

• வாடிக்கையாளர் ஆதரவை வழங்கவும், உங்களுடனான எங்களின் தொடர்புகளை ஆராய்ந்து மேம்படுத்தவும்;

• சந்தைப்படுத்தல் பிரச்சாரங்களை கண்காணிக்கவும் மேம்படுத்தவும் மற்றும் உங்களுக்கு பொருத்தமான பரிந்துரைகளை வழங்கவும்;

• முதல்படி, இந்த தனியுரிமைக் கொள்கையில் மாற்றங்கள், சேவை விதிமுறைகள் அல்லது பிற முக்கியமான அறிவிப்புகள் பற்றி உங்களுடன் (மின்னஞ்சல் மூலம் போன்றவை) தொடர்பு கொள்ள.

உங்கள் தகவல்களை நாங்கள் யாருடன் பகிர்கிறோம்?

ஊழியர்கள் மற்றும் சுயாதீன ஒப்பந்ததாரர்கள்: முதல்பாடி ஊழியர்கள் மற்றும் சுயாதீன ஒப்பந்தக்காரர்கள் உங்கள் தகவல்களைத் தெரிந்துகொள்ள வேண்டிய அடிப்படையில் அணுகலாம். அனைத்து ஊழியர்களும் சுயாதீன ஒப்பந்தக்காரர்களும் அவர்களுடன் நாங்கள் பகிர்ந்து கொள்ளும் தனிப்பட்ட தகவல்களுக்கு இந்த தனியுரிமைக் கொள்கையைப் பின்பற்ற வேண்டும் என்று நாங்கள் வலியுறு றோம்.

அடையாள சரிபார்ப்பு **சேவை** வழங்குநர்கள் மற்றும் கடன் **தகவல் பணியகம்**: உங்கள் அடையாளத்தைச் சரிபார்க்கவும், கடன் தகுதியை மதிப்பிடவும் மற்றும் மோசடியைக் கண்டறியவும் மற்றும் தடுப்பதற்காகவும் சில தனிப்பட்ட தகவல்களை மூன்றாம் நபர் அடையாள சரிபார்ப்பு சேவை வழங்குநர்களுக்கும் கடன் பதிவுகளுக்கும் நாங்கள் வழங்க கூடும். இந்த சேவை வழங்குநர்கள் சட்டப்பூர்வ தரவுக் காப்பு மற்றும் தனியுரிமை சட்டங்களின் படி உங்கள் தனிப்பட்ட தகவல்களை பயன்படுத்த வேண்டும்.

மூன்றாம் நபர் சேவை வழங்குநர்கள்: நாங்கள் சில மூன்றாம் நபர் சேவை வழங்குநர்களுடன் உங்கள் தனிப்பட்ட தகவல்களையும், ஒன்றிணைந்த அல்லது அடையாளம் நீக்கப்பட்ட தகவல்களையும் பகிர நேரிடலாம். இந்த மூன்றாம் சேவை நபர் சேவை வழங்குனர்கள் குழு நிறுவனங்கள், ஜோஹோ கூட்டாளிகள், நேரடி விற்பனை முகவர்கள், வங்கி தொடர்பாளர்கள், விளம்பர மற்றும் சந்தைப்படுத்தல் கூட்டாளிகள், நிகழ்வு ஏற்பாட்டாளர்கள், வீடியோ KYC வழங்குநர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கட்டண சேவை நிறுவனங்கள் போன்றவற்றை உள்ளடக்கியது. இந்த சேவை வழங்குநர்கள் எங்களுக்கு சேவைகளை வழங்குவதற்கு அவசியமான வகையில் மட்டுமே உங்கள் தனிப்பட்ட தகவல்களை பயன்படுத்த அனுமதிக்கப்படுகின்றன.

*சட்ட கடமைகளுக்கான* ***தகவல்*** *வெளிப்பாடு: தேசிய பாதுகாப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்வது உட்பட, பொருந்தக்கூடிய எந்தவொரு சட்டம், ஒழுங்குமுறை, சட்டச் செயல்முறை அல்லது அரசாங்க கோரிக்கைக்கு இணங்க உங்கள் தனிப்பட்ட தகவலை நாங்கள் சட்டபடி வெளியிட வேண்டியிருக்கலாம். உங்கள் KYC பதிவுகளை நாங்கள் CKYCR க்கு சமர்ப்பிக்க வேண்டும், மேலும் நீங்கள் ஏதேனும் சந்தேகத்திற்கிடமான பரிவர்த்தனைகளைச் செய்தால் உங்கள் தனிப்பட்ட தகவல்களை நிதி நுண்ணறிவு பிரிவு-இந்தியா (FIU-IND)-யிடம் பகிரப்படலாம் மற்றும் பாதுகாப்பட்ட கடன்களை திருப்பிச் செலுத்தத் தவறினால், நொடிப்பு மற்றும் திவால் வாரியத்தில் (IBBI) பதிவுசெய்யப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட தகவல் பயன்பாட்டுடன் பகிர்ந்து கொள்ளலாம்.*

*பிற* ***நிகழ்வுகள்:*** *மோசடி, ஸ்பேம் பில்டர்ங், எந்தவொரு சந்தேகத்திற்கிடமான சட்டவிரோத நடவடிக்கையையும் விசாரிப்பது, எங்கள் ஒப்பந்தங்கள் அல்லது கொள்கைகளை அமல்படுத்துவது அல்லது எங்கள் வாடிக்கையாளர்களின் பாதுகாப்பைப் பாதுகாப்பது ஆகியவற்றிற்கு அத்தகைய வெளிப்பாடு அவசியம் என்று நாங்கள் நம்பினால் மூன்றாம் தரப்பினருக்கு தகவல்களை வெளியிடலாம்.*

***உங்களைப் பற்றி நாங்கள் வைத்திருக்கும் தகவல் தொடர்பான உங்கள் உரிமைகள்***

*உங்களைப் பற்றி நாங்கள் வைத்திருக்கும் தகவல் தொடர்பாக உங்களுக்கு பின்வரும் உரிமைகள் உள்ளன:*

- *அணுகல் உரிமை: தகவலின் ஆதாரம், நோக்கம் மற்றும் செயலாக்க காலம் மற்றும் தகவல் பகிரப்பட்ட நபர்கள் உட்பட உங்களைப் பற்றி நாங்கள் வைத்திருக்கும் தனிப்பட்ட தகவல்களின் வகைகளை அணுக (மற்றும் தேவைப்பட்டால் அதன் நகலைப் பெற) உங்களுக்கு உரிமை உண்டு.*

- *திருத்த உரிமை: உங்களைப் பற்றி நாங்கள் வைத்திருக்கும் தகவல்களைப் புதுப்பிக்கவோ அல்லது ஏதேனும் தவறுகளைச் சரிசெய்யவோ உங்களுக்கு உரிமை உண்டு. உங்கள் தகவலை நாங்கள் பயன்படுத்தும் நோக்கத்தின் அடிப்படையில், எங்கள் தரவுத்தளத்தில் உங்களைப் பற்றிய கூடுதல் தகவல்களைச் சேர்க்க நீங்கள் எங்களுக்கு அறிவுறுத்தலாம்.*

- ***நீக்கும்*** *உரிமை: உங்கள் தனிப்பட்ட தகவலை முன்னர் சேகரிக்கப்பட்ட நோக்கத்திற்கு இனி தேவைப்படாதபோது, சில சூழ்நிலைகளில் அதை நீக்குமாறு கோர உங்களுக்கு உரிமை உள்ளது.*

- ***ஒப்புதலை திரும்பப் பெறுவதற்கான உரிமை:*** *உங்கள் தகவலை செயலாக்குவதற்கு உங்கள் ஒப்புதலை நாங்கள் நம்பியிருந்தால், எந்த நேரத்திலும் உங்கள் ஒப்புதலை திரும்பப் பெற உங்களுக்கு உரிமை உண்டு, ஆனால் இது ஏற்கனவே நடந்த எந்தவொரு செயலாக்கத்தையும் பாதிக்காது.*

- *புகார் அளிக்கும் உரிமை: உங்கள் தகவல்களை நாங்கள் சேகரிக்கும், பயன்படுத்தும் அல்லது பகிர்ந்து கொள்ளும் விதத்திற்கு எதிராக உங்கள் குறைகளை நாங்கள் எவ்வாறு தீர்த்தோம் என்பதில் நீங்கள் திருப்தி அடையவில்லை என்றால் பொருத்தமான மேற்பார்வை அதிகாரத்திடம் புகார் செய்ய உங்களுக்கு உரிமை உண்டு.*

- *நியமனம் செய்யும் உரிமை: உங்கள் மரணம் அல்லது இயலாமை ஏற்பட்டால், மேற்கூறிய உரிமைகளைப் பயன்படுத்தும் வேறு எந்த தனிநபரையும் நியமிக்க உங்களுக்கு உரிமை உண்டு.*

*மேலே குறிப்பிட்டுள்ள எந்தவொரு உரிமையையும் பயன்படுத்த நீங்கள் எங்களை privacy@zfpl.com என்ற மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளலாம்.*

தகவல் பயன்பாட்டு விருப்பங்கள்

- ***அத்தியாவசியமற்ற மின்னஞ்சல் தகவல்தொடர்புகளைத் தவிர்க்கவும்***: அனைத்து செய்திகளிலும் உள்ள 'சந்தாவிலக்கு (unsubscribe)' செயல்பாட்டைப் பயன்படுத்தி, செய்திமடல்கள் மற்றும் பிற அத்தியாவசியமற்ற செய்திகளைப் பெறுவதைத் தவிர்க்கலாம். இருப்பினும், கணக்கு அறிவிப்பு மின்னஞ்சல்கள் (கடவுச்சொல் மாற்றம், புதுப்பித்தல் நினைவூட்டல்கள், முதலியன), பாதுகாப்பு சம்பவ விழிப்பூட்டல்கள், பாதுகாப்பு மற்றும் தனியுரிமை அறிவிப்புகள் மற்றும் அத்தியாவசிய பரிவர்த்தனை மற்றும் கட்டணம் தொடர்பான மின்னஞ்சல்கள் போன்ற அத்தியாவசிய அறிவிப்புகள் மற்றும் மின்னஞ்சல்களை நீங்கள் தொடர்ந்து பெறுவீர்கள்.

- விருப்பத்தேர்வு தகவல்: எங்கள் வலைத்தளங்களுடன் இணைக்கப்பட்ட எந்தவொரு படிவத்தையும் சமர்ப்பிக்கும்போது கட்டாயமல்லாத புலங்களை நிரப்ப வேண்டாம் என்று நீங்கள் எப்போதும் தேர்வு செய்யலாம்.

*தகவல்**கலைத் தக்கவைத்தல்***

இந்த தனியுரிமைக் கொள்கையில் கூறப்பட்டுள்ள நோக்கங்களுக்காக உங்கள் தனிப்பட்ட தகவல்களைத் தேவைப்படும் வரை நாங்கள் வைத்திருக்கிறோம். சில நேரங்களில், அடக்குமுறை பட்டியல்களைப் பராமரிப்பது, சட்டப்பூர்வ உரிமைகோரல் அல்லது நடவடிக்கைகள் தொடர்பாக தேவைப்பட்டால் துஷ்பிரயோகத்தைத் தடுப்பது, எங்கள் ஒப்பந்தங்களை அமல்படுத்துவது, வரி, கணக்கியல் அல்லது பிற சட்டபூர்வமான கடமைகளுக்கு இணங்குவது போன்ற சட்டத்தால் அனுமதிக்கப்பட்ட அல்லது தேவைப்படும் நீண்ட காலத்திற்கு உங்கள் தகவல்களை நாங்கள் வைத்திருக்கலாம். உங்கள் தகவலை செயலாக்க எங்களுக்கு இனி முறையான தேவை இல்லாதபோது, எங்கள் செயலில் உள்ள தரவுத்தளங்களிலிருந்து உங்கள் தகவலை நீக்குவோம். நாங்கள் தகவலைப் பாதுகாப்பாகச் சேமித்து வைப்போம் மற்றும் நீக்குதல் சாத்தியமாகும் வரை காப்புப்பிரதி வட்டுகளில் மேலும் செயலாக்கத்திலிருந்து தனிமைப்படுத்துவோம்.

***உங்கள் தகவல் எவ்வளவு பாதுகாப்பானது***

முதல்படியில், தரவு பாதுகாப்பை நாங்கள் மிகவும் தீவிரமாக எடுத்துக்கொள்கிறோம். உங்கள் தகவலின் அங்கீகரிக்கப்படாத அணுகல், பயன்பாடு, மாற்றம், வெளிப்படுத்தல் அல்லது அழிவு ஆகியவற்றைத் தடுக்க பொருத்தமான நிர்வாக, தொழில்நுட்ப மற்றும் காகித நகல் பாதுகாப்புகளைச் செயல்படுத்த நாங்கள் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

***குறைதீர்ப்பு அதிகாரி***

இந்த தனியுரிமைக் கொள்கையின்படி உங்கள் தனிப்பட்ட தகவல்களை நாங்கள் நிர்வகிப்பதை மேற்பார்வையிட ஒரு குறைதீர்ப்பு அதிகாரியை நியமித்துள்ளோம். உங்கள் தனிப்பட்ட தகவல்கள் தொடர்பாக எங்கள் தனியுரிமை நடைமுறைகள் குறித்து ஏதேனும் கேள்விகள் அல்லது அய்யங்கல் இருந்தால், நீங்கள் ஒரு மின்னஞ்சல் அனுப்புவதன் மூலம் எங்கள் குறை தீர்க்கும் அதிகாரியை அணுகலாம் grievance@zfpl.com அல்லது கடிதம் மூலம்: குறை தீர்க்கும் அதிகாரி, 942, கிரிஸ்ப் ஐடி பார்க், வண்டலூர் கேளம்பாக்கம் சாலை, கிழோட்டையூர் கிராமம், வண்டலூர் தாலுகா, செங்கல்பட்டு, தமிழ்நாடு-600127.

எங்கள் வலைதளங்களில் வெளிப்புற இணைப்புகள்

எங்கள் வலைத்தளங்களின் சில பக்கங்களில் இந்த தனியுரிமைக் கொள்கையுடன் இணைக்கப்படாத வலைத்தளங்களுக்கான இணைப்புகள் இருக்கலாம். இந்த மூன்றாம் தரப்பு தளங்களில் ஏதேனும் உங்கள் தனிப்பட்ட தகவல்களை நீங்கள் சமர்ப்பித்தால், உங்கள் தனிப்பட்ட தகவல்கள் அவர்களின் தனியுரிமைக் கொள்கைகளால் நிர்வகிக்கப்படுகின்றன. ஒரு பாதுகாப்பு நடவடிக்கையாக, இந்த மூன்றாம் தரப்பினரின் தனியுரிமைக் கொள்கைகளை நீங்கள் சரிபார்த்து, அவர்களின் தனியுரிமை நடைமுறைகளை உறுதிப்படுத்தாவிட்டால் எந்தவொரு தனிப்பட்ட தகவலையும் பகிர்ந்து கொள்ள வேண்டாம் என்று நாங்கள் பரிந்துரைக்கிறோம்.

வலைப்பதிவுகள் மற்றும் மன்றங்கள்

எங்கள் வலைத்தளங்களில் பொதுவில் அணுகக்கூடிய வலைப்பதிவுகள் மற்றும் மன்றங்களை நாங்கள் வழங்குகிறோம். இந்த வலைப்பதிவுகள் மற்றும் மன்றங்களில் நீங்கள் வழங்கும் எந்த தகவலும் கோரப்படாத செய்திகளுடன் உங்களைத் தொடர்பு கொள்ள பயன்படுத்தப்படலாம் என்பதை தயவுசெய்து அறிந்து கொள்ளுங்கள். எங்கள் வலைப்பதிவுகள் மற்றும் மன்றங்களில் தனிப்பட்ட தகவல்களை வெளியிடுவதில் எச்சரிக்கையாக இருக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். பகிரங்கமாக வெளியிட நீங்கள் தேர்ந்தெடுக்கும் தனிப்பட்ட தகவல்களுக்கு நாங்கள் பொறுப்பல்ல. முதல்படியில் உங்கள் கணக்கை நீங்கள் முடித்த பிறகும் உங்கள் பதிவுகள் மற்றும் சில சுயவிவரத் தகவல்கள் அப்படியே இருக்கலாம்.

உங்கள் தகவல்களை எங்கள் வலைப்பதிவுகளில் இருந்து நீக்குவதற்கு நீங்கள் எங்களை privacy@zfpl.com முகவரிக்கு அணுகலாம்.

வணிக மாற்றங்கள்

எங்கள் வணிகத்தை விற்க நாங்கள் விரும்பவில்லை. இருப்பினும், நாங்கள் எங்கள் வணிகத்தை வாய்ப்பில்லாத நிகழ்வில் விற்கவோ அல்லது கையகப்படுத்தவோ அல்லது இணைக்கவோ, கையகப்படுத்தும் நிறுவனம் உங்களுக்கான எங்கள் கடமைகளை மதிக்க சட்டப்பூர்வமாக கட்டுப்படுவதை உறுதி செய்வோம். உரிமையில் ஏதேனும் மாற்றம் அல்லது உங்கள் தனிப்பட்ட தகவலின் பயன்பாடு குறித்து மின்னஞ்சல் வழியாகவோ அல்லது எங்கள் வலைத்தளத்தில் ஒரு முக்கிய அறிவிப்பு மூலமாகவோ உங்களுக்கு அறிவிப்போம். உங்கள் தனிப்பட்ட தகவல்கள் தொடர்பாக உங்களுக்கு ஏதேனும் தேர்வுகள் இருந்தால் நாங்கள் உங்களுக்கு அறிவிப்போம்.

இந்த தனியுரிமைக் கொள்கையுடன் **இணங்க**

நீங்கள் வழங்கும் தனிப்பட்ட தகவல்கள் இந்த தனியுரிமைக் கொள்கைக்கு இணங்க பயன்படுத்தப்படுவதை உறுதிசெய்ய அவ்வப்போது மதிப்பாய்வுகள் உட்பட அனைத்து முயற்சிகளையும் நாங்கள் செய்கிறோம். இந்த தனியுரிமைக் கொள்கையை நாங்கள் பின்பற்றுவது அல்லது உங்கள் தனிப்பட்ட தகவல்கள் பயன்படுத்தப்படும் விதம் குறித்து உங்களுக்கு ஏதேனும் அய்யங்கல் இருந்தால், தயவுசெய்து எங்களுக்கு எழுதுங்கள் privacy@zfpl.com. நாங்கள் உங்களைத் தொடர்புகொள்வோம், தேவைப்பட்டால், உங்கள் அய்யங்கல் திறம்பட தீர்க்க பொருத்தமான ஒழுங்குமுறை அதிகாரிகளுடன் ஒருங்கிணைப்போம்.

**மாற்றங்களுக்கான அறிவிப்பு**

உங்களுக்கு அறிவித்தவுடன் எந்த நேரத்திலும் தனியுரிமைக் கொள்கையை நாங்கள் மாற்றியமைக்கலாம். உங்கள் உரிமைகளைப் பாதிக்கும் தனியுரிமைக் கொள்கையில் குறிப்பிடத்தக்க மாற்றங்களைச் செய்தால், மாற்றங்கள் குறித்து குறைந்தது 30 நாட்கள் முன்கூட்டியே உங்களுக்கு அறிவிக்கப்படும். தனியுரிமைக் கொள்கையில் மாற்றங்கள்

*செய்யப்பட்ட தேதிக்குப் பிறகு நீங்கள் தொடர்ந்து பயன்படுத்துவது மாற்றியமைக்கப்பட்ட தனியுரிமைக் கொள்கைக்கு உங்கள் ஒப்பந்தமாகக் கருதப்படும். தனியுரிமைக் கொள்கையில் சிறிய மாற்றங்கள் குறித்த அறிவிப்பை நீங்கள் பெற மாட்டீர்கள். உங்கள் மின்னஞ்சல் முகவரியை நீங்கள் சரிபார்க்கவில்லை என்றால் தனியுரிமைக் கொள்கையில் மாற்றங்கள் குறித்த எந்த அறிவிப்பையும் நீங்கள் பெற மாட்டீர்கள். உங்கள் தனிப்பட்ட தகவல்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பது குறித்து நீங்கள் அய்யப்படுகிறீர்கள் என்றால், நீங்கள் அவ்வப்போது எங்கள் வலைத்தளத்தை சரிபார்க்க வேண்டும்.*

**தனியுரிமைக் கொள்கையின் இணைப்பு**

*ஏற்றுக்கொள்ளப்பட்ட சரிபார்ப்பு ஆவணங்கள்:*

- *ஆதார் அட்டை.*
- *பாஸ்போர்ட்.*
- *ஓட்டுநர் உரிமம்.*
- *வாக்காளர் அடையாள அட்டை.*
- *நிரந்தர கணக்கு எண் (PAN) அட்டை.*
- *பயன்பாடு கட்டணங்கள்*
- *வேலை மற்றும் சம்பளம் தொடர்பான ஆவணங்கள்.*
- *வரி ரசீதுகள்.*
- *ஓய்வூதியம் அல்லது குடும்ப ஓய்வூதிய பணம் வழங்கும் ஆணைகள் (PPOs), மத்திய அல்லது மாநில அரசு துறையால் வழங்கப்பட்ட தங்குமிட ஒதுக்கீடு கடிதம்.*
- *விண்ணப்பதாரரின் அந்தந்த ஒழுங்குமுறை அமைப்பு அல்லது சங்கத்தால் வழங்கப்பட்ட உரிமங்கள் அல்லது சான்றிதழ்கள் போன்ற தொழில்துறை குறிப்பிட்ட ஆவணங்கள்.*
- *நிறுவன ஆவணங்கள் போன்ற நிறுவனத்தின் பதிவுச் சான்றிதழ், நிதி அறிக்கைகள், வங்கி அறிக்கைகள், நிறுவன PAN, GST, ITR தாக்கல், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி சான்றிதழ், உத்யம் சான்றிதழ், கூட்டுத்தாபன ஒப்பந்தம், மற்றும் ஒப்பந்த உடன்படிக்கை, ISO சான்றிதழ்.*

*இந்த தகவல்கள் அடங்கிய பகுதியை உங்களுக்கு விளக்கும் வகையில் நாங்கள் இந்த தனியுரிமைக் கொள்கையை அறிமுகப்படுத்தியுள்ளோம். மேலும் விவரங்கள் அல்லது கேள்விகளுக்கு நீங்கள் எங்களை அணுகலாம்.*